உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

நாள் :26.03.2026
அ.சா.1 – உஷாராணி S/o சிவக்குமார்
S.C. No. 378/2025:

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

நான் பிளஸ்டு வரை படித்துள்ளேன். என் தாயார் கனகவள்ளி 1998ம் ஆண்டு இறந்துவிட்டார். சம்பவம் நடைபெற்ற காலகட்டம் கொரானா காலகட்டம் என்றால் சரிதான். கொரானா காலகட்டத்தில் மக்கள் யாரும் பொது இடததிற்கு கூட்டமாக செல்லக்கூடாது என்று தடை உத்தரவு அமலில் இருந்து என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ஒத்தக்கடையில் உள்ள சுதந்திரம் 2வதுதெருவில் செந்திலாதிபன் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் சாப்பிடுவதற்காக மட்டும் தான் என் வீட்டிற்கு வருவது வழக்கம் என்றால் சரிதான். மற்ற நேரம் எல்லாம் அவர் சுதந்திரம் 2வது தெருவில் தான் என் தந்தை இருப்பது வழக்கம் என்றால் சரிதான். என் அப்பா இருந்த சுதந்திரம் 2வது தெருவில் உள்ள வீட்டில் ஹால், பெட்ரூம், பாத்ரூம் எல்லாம் இருந்தது என்றால் சரிதான். என் தந்தை இருந்த வீட்டில், தெருவிலும் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் திருமோகூர் ரோட்டில் உள்ள என்னுடைய வீட்டில், ஒத்தக்கடையில் இருந்தேன். சம்பவம் பற்றி அக்கம்பக்கத்தினர் எனக்கு சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக எந்த விஷயமும் தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு செல்லாமல் நான் நேரடியாக காவல்நிலையத்திற்கு சென்றுள்ளேன் என்றால் சரிதான். காவலர்கள் சொல்ல சொல்ல தான் அவர்களிடம் புகாரில் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். மேற்படி காவலர்கள் சொல்ல சொல்ல எழுதப்பட்ட புகார் தான் அ.சா.ஆ.1 என்றால் சரிதான். என் தந்தையை மருத்துவமனையில் சேர்த்தது என் சித்தி மகன்

மணிக்குமார் என்றால் சரிதான். அவரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் மதுரையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் சரிதான். புகாரில் சொன்னபடி, சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் எதிரி மீது கொண்ட காழ்புணர்ச்சி காரணமாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் புகார் கொடுத்துவிட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா செந்திலாதிபனுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் கழிவறையை சுத்தம் செய்யும் போது தவறுதலாக அவர் மீது ஆசிட்பட்டு ஏற்பட்ட காயங்கள் என்றும் அதற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை :

நானும், ஆஜர் எதிரியும் சமாதானம் ஆகிவிட்டு முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை மறைத்து ஆதாயம் பெற்று கொண்டு நான் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு ஏற்பட்ட காயங்கள் ஆஜர் எதிரியால் தான் ஏற்பட்டது என்றும் உண்மையை மறைத்து தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.26 10:15:50 +0530

Assistant Sessions Judge

Melur